செ.வெ.எண்:19/ஜூன் நாள்:10.06.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## தேவிப்பட்டிணம் மற்றும் திருப்பாலைக்குடி பகுதிகளில் உள்ள அரசுப் பள்ளிகளில்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்

இராமநாதபுரம் மாவட்டம், தேவிப்பட்டிணம் மற்றும் திருப்பாலைக்குடி ஆகிய கிராமங்களில் உள்ள அரசு பள்ளிகளில் இன்று (10.06.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து மாணவ, மாணவியர்களுக்கு பல்வேறு அறிவுரைகளை வழங்கி பள்ளிகளில் மாணவ, மாணவியர்களின் நலனுக்கான அடிப்படை வசதிகளை ஆய்வு செய்தார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 2015-2016-ஆம் கல்வி ஆண்டில் அரசு பொதுத் தேர்வு எழுதிய மாணவ, மாணவியர்களில் மேல்நிலைப்பள்ளிகளில் (12-ஆம் வகுப்பு) ஒட்டுமொத்த தேர்ச்சி சதவீதம் 95.04% ஆகவும், இடைநிலைப்பள்ளிகளில் (10-ஆம் வகுப்பு) ஒட்டுமொத்த தேர்ச்சி சதவீதம் 97.1% - ஆகவும் உள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் 10-ஆம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகளின்படி மாநில அளவில் கடந்த ஆண்டு பெற்ற 8-ஆம் இடத்திலிருந்து இந்த ஆண்டு 4-ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும் 2016-இல் நடைபெற்ற 10 மற்றும் 12-ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் 90 சதவீதத்திற்கும் குறைவான தேர்ச்சி விகிதம் பெற்ற பள்ளிகளில் இன்றைய தினம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று ஆய்வு செய்தார். முதலாவதாக தேவிப்பட்டிணம் அரசு மேல்நிலைப்பள்ளியிலும் தொடர்ந்து திருப்பாலைக்குடி அரசு மேல்நிலைப்பள்ளியிலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது தினந்தோறும் மாலைப்பொழுதில் மாணவ, மாணவியர்களுக்கு சிறப்பு வகுப்புகள் நடத்திட வேண்டும் என அறிவுறுத்தினார். மாணவ, மாணவியர்களுக்கு அதிகளவிலான மாதிரி தேர்வுகள் நடத்தி உடனுக்குடன் விடைத்தாள்களை திருத்தி மாணவர்களிடம் வழங்கிடவும் ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தினார். 2016-2017-ஆம் கல்வி ஆண்டில் நடைபெறவுள்ள அரசு பொதுத் தேர்வுகளில் 100 சதவீதம் மாணவ, மாணவியர்களின் தேர்ச்சி எய்திட வேண்டும் என அறிவுரை வழங்கினார்.

தொடர்ந்து தேவிப்பட்டிணம் மற்றும் திருப்பாலைக்குடியில் உள்ள அரசு தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் சென்று ஆய்வு செய்தார். மாணவ, மாணவியர்களுக்கு பேசுதல், எழுதுதல், வாசித்தல் உள்ளிட்ட அடிப்படைத் திறன்களை மேம்படுத்திட பயிற்சி வழங்கிட வேண்டும் எனவும், கணிதப் பாடப்பிரிவில் எளிய பயிற்சி முறைகளை பின்பற்றி மாணவ, மாணவியர்களுக்கு திறம்பட கல்வி பயிற்றுவிக்க வேண்டும் என ஆசிரியர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட முதன்மைகல்வி அலுவலர் திரு.ஜெயக்கண்ணு, இராமநாதபுரம் மாவட்ட கல்வி அலுவலர் திரு.ஜேசுரத்தினம் உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**